17.04.2026

RLTOP.No.7/2023

எ.ம.சா.2.திரு. சண்முகம், த.பெ.திரு.சொட்டவாலை என்ற வீரன் செட்டியார்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. மனு சொத்தை கிரையம் வாங்குவதற்கு ரூ.25000/-ஐ எதிர்மனுதாரர் கொடுத்துள்ளார் என்றும், அதை மனுதாரருக்காக விட்டுக் கொடுத்துள்ளார் என்றும் அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கூட்டு குடும்பமாக இருந்ததால் ஆவணங்கள் எதுவும் இல்லை. மனுதாரர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் எதிர்மனுதாரர் ரூ.25000/-ஐ கொடுத்தார் என்பது சம்மந்தமாக எந்த குறிப்பும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

2. மனு சொத்து சம்மந்தமான கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மனு சொத்தை மனுதாரர் கிரையம் பெற்ற போது நான் கிடையாது என்றாலும், எனவே பணம் கொடுத்த விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

3. மனு சொத்திற்கு கிரைய தொகை எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டது என்றால் ரூ.75000/-என்று நினைக்கிறேன். மேற்படி ரூ.75000/- எவ்வாறு கொடுத்தார்கள் எப்போது கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பாவிற்குதான் முழுமையாக தெரியும் எனக்கு ஓரளவிற்குதான் தெரியும்.

4. நெருங்கிய உறவு முறை என்ற அடிப்படையில் எங்களுக்குள் சொத்துக்கள் சம்மந்தமாக உள்ள கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் தான் மனு சொத்தை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கடை நடத்த வாடகைக்கு விட்டுயிருந்தார் என்றால் இல்லை. மனு சொத்து வாடகைக்குதான் கொடுக்கப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக எதிர்மனுதாரருக்கு சாதமாக அனுமதியின் பெயரில் வழங்கப்பட்டது என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

5. மனுதாரரின் சகோதரர் புகழேந்தி என்பவர் எனக்கு எதிராக O.S. 294/2022 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். மனுதாரர் சகோதரர் எனக்கு எதிராக வழக்குதாக்கல் செய்துள்ளதால் நான் எனது சகோதரரான எதிர்மனுதாரருக்கு ஆதரவாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.